**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10022025-9809

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.09.2025

Accepted: 28.09.2025

Published: 01.10.2025

Citation:
Rathinakumar, N. (2025). The Livelihood of Paravas in Tamil Novels. *Shanlax International Journal of Tamil Research, 10*(2), 9-19.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9809

*Corresponding Author:
thnastamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Livelihood of Paravas in Tamil Novels

**Dr. N. Rathinakumar**
*Associate Professor*
*Madurai College, Madurai*
*http://orcid.org/ 0009-0003-3283-494X*

**Abstract**

*Fisherfolk constitute one of the major ethnic communities living in the southern districts. They are known by various names such as Parava, Fernando, Mukkuvar, and Nulayar. Literary evidence about them has been available since the Sangam period. Neythal Tinai poems are among the most renowned in ancient Tamil literature. 'Senbagharaman Pallu' is considered an important text that described the lives of fisherfolk during the medieval period. Even with the emergence of modern literature, fisherfolk have been discussed extensively. Notable works include Rajam Krishnan's Alaivaaykaraiyile, Bodhi Sattva Maitreyava's Sippiyin Vayittril Muthu, Vannanilavan's Kadalpurathil, Thoppil Muhamuthu Meeran's Oru Kadalora Kiramatthin Kathai and Thuraimugam, Ponneelan's Thedal, Sridara Ganesan's Vaangal, Joe D. Kurus's Azhisuzh Ulagu and Korkai, Christopher Anthony's Thuraivan, Kurumbanai Berlin's novels, and Varithaya Constantine's stories. These fictional works hold great significance. This paper examines the space given to fisherfolk in these narratives, their livelihood challenges, and cultural aspects.*

***Keywords:*** *Mukkuvar, Ethnography, Ethnic Communities, Values, Texts, Transgressions, Production Relations*

**References**

1. M. Rasamanickkanar, Patthuppattu Aaraichchi, p.565, Sahitya Akademi, Chennai, 2012.
2. Bhaktavatsala Bharathi, Panpaattu Uraiyaadal, p.109, Adaiyalam, Puthannattam, 2017.
3. Ponneelan, Thedal, p.04, New Century Book House, Chennai, 98.
4. Ibid., p.62.
5. Ibid., p.49.
6. A. Sivasubramaniyan, Inavaraivilyalum Tamil Navalum, p.62, New Century Book House, Chennai, 2014.
7. Bhaktavatsala Bharathi, Panpaattu Maanidaviyal, p.141, Adaiyalam, Puthannattam, 2011.
8. H.R. Peermuhamad, Edward Saiyathum Keezhaitheyaviyalum, p.84, Bharathi Puthakalayam, Chennai, 2017.
9. Ka. Mohanarangan, Sol-Porul-Maunam, p.149, United Writers, Chennai, 2004.
10. Bhaktavatsala Bharathi, Varalatru Maanidaviyal, p.68, Adaiyalam, Puthannattam, 2013.
11. Jeyamohan, Thuraivan, Foreword, Mukkadal, Chennai, 2015.

**Bibliography**

1. A. Thananjayan, Vilimbunilai Makkal Vazhakkarukal (Inavaraiviyal Aaivu), New Century Book House, Chennai, 2015.

2. Dr. The. Gnanasekaran, Makkal Vaazhvil Manthira Sadangugal, New Century Book House, Chennai, 2009.
3. A. Sivasubramanyan, Tamilk Kiristhavam, Kalachuvadu, Nagercoil, 2014.
4. T. Dharmaraj, Naan Yen Thalithum Alla, Kizhakku Pathippagam, Chennai, 2018.
5. A. Ka. Perumal, Thenkumariyin Kathai, United Writers, Chennai, 2003.

# தமிழ் நாவல்களில் பரதவர்களின் வாழ்வியல்

***முனைவர் ந. இரத்தினக்குமார்***
இணைப் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***

*தென்மாவட்டங்களில் வாழும் முக்கிய இனக்குழுக்களாக மீனவர்கள் இருக்கிறார்கள். பரதவர், பெர்னாண்டோ, முக்குவர், நுழையர் எனப் பலதரப்பட்ட பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள். இவர்களைப் பற்றி இலக்கிய ஆதாரங்கள் சங்காலத்தில் இருந்தே கிடைக்கின்றன. நெய்தல் திணைப்பாடல்கள் பண்டை இலக்கியங்களில் மிகப் பிரசித்தி பெற்றவை. "சென்பகராமன் பள்ளு" மீனவர்களின் வாழ்க்கையை இடைக் காலத்தில் சொன்ன முக்கியமான பிரதியாகக் கருதப்படுகிறது. நவீன இலக்கியங்கள் தோன்றிய போதும் மீனவர்கள் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளன. குறிப்பாக இராஜம் கிருஷ்ணனின் அலைவாய்க்கரையிலே, போதி சத்வ மைத்ரேயாவின் சிப்பியின் வயிற்றில் முத்து, வண்ணநிலவனின் கடல்புரத்தில், தோப்பில் முகமுது மீரானின் ஒரு கடலோர கிராமத்தின் கதை, துறைமுகம், பொன்னீலனின் தேடல், ஸ்ரீதர கணேசனின் வாங்கல், ஜோ.டி.குருஸின் ஆழிசூழ் உலகு, கொற்கை, கிறிஸ்டோபர் ஆன்றணியின் துறைவன், குறும்பனை பெர்லினின் நாவல்கள், வஹிதையா கான்ஸ்தந்தின் கதைகள் போன்ற புனைவுகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இப்புனைகதைகளில் மீனவர்கள் பெறும் இடம், அவர்களின் வாழ்வியல் சிக்கல்கள், பண்பாட்டு அம்சங்கள் போன்றவை இடம்பெற்றுள்ள கூறுகள் இங்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

***திறவு சொற்கள்:*** *முக்குவர், இனவரைவியல், இனக்குழுக்கள், விழுமியங்கள், பிரதிகள், மீறல்கள், உற்பத்தி உறவுகள், பரதவர்கள், திறனாய்வு*

**முன்னுரை**

பரதவர், பரவர், அல்லது பரதர் என்போர், தமிழகத்தின் மிகப் பழமையான இனக்குழுக்கள். பண்டைக் காலங்களில் கடல் சார் துறை முகங்களான தொண்டி, முசிறி, அழகன்குளம் மூன்றும் பாண்டிய நாட்டின் சர்வதேசத் தொடர்பு மையங்களாகும். அதனால், பாண்டிய அரசின் உருவாக்கங்களில் வளர்ச்சியில் பரதவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. பாண்டிய வம்சத்தைத் தோற்றுவித்தவர்கள் மீனவர்களே என்ற கருத்தும் உண்டு. மீன் கொடியினைக் கொண்டு தமிழ் அரசைத் தோற்றுவித்தவர்கள் பரதவர்களே என்பாரும் உண்டு. மீன் பிடித்தல், முத்துக் குளித்தல், சங்கறுத்தல், உப்பு விளைவித்தல் போன்றவை இவர்களின் தொழில்கள். சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் இவர்கள் புகழைப் பாடுகின்றன. இலக்கியங்கள், செப்புப்பட்டயங்கள், வெளிநாட்டார் குறிப்புகள், கல்வெட்டுக்கள் எனப் பல ஆதாரங்கள் பரதவர்களின் வரலாற்றை எடுத்துரைக்கிறது. பல்வேறு படையெடுப்புகள் ஆட்சி மாற்றங்களில் ஒடுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டாலும் மீண்டும் மீண்டும் தங்களின் உழைப்பால் இனக்குழு வாழ்க்கையால் மீண்டெழுந்த வரலாற்றைப் பார்க்க முடிகிறது. முன்நாட்களில் பாண்டியர் என்றும், படையாட்சியர், வில்லவராயர், பூபாலராயர், பாண்டியதேவர், சிங்கராயர் என்றெல்லாம் அழைக்கப் பட்டவர்கள் இன்று பெர்னாண்டோ, மச்சாடோ, மச்காறேன்ஹாஸ், ரோட்ரிகோ என்ற போர்த்துக்கீசிய பெயர்களாலும் அழைக்கப் படுகிறார்கள்.

பண்டைக் காலத்திலிருந்தே தமிழக எல்லை கடலால் மீனவர்களால் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதை பல வரலாற்றாய்வாளரகள் குறிப்பிடுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நாவல்களில் பரதவர்களின் வாழ்வையும் வரலாற்றையும் இனவியல் அடிப்படையில் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**வண்ணநிலவனின் கடல்புரத்தில்**

இந்திய நாவல்களில் கடல் வாழ் மக்களின் கதையைச் சொன்னதில் முதன்மையானதாகப் போற்றப்படுவது செம்மீன். தகழியின் ஆகச் சிறந்த படைப்பு. இந்திய மொழிகளில் பலவற்றிலும் உள்ளடக்கம் சார்ந்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது செம்மீன். தமிழ் நாவல் மரபில் செம்மீனின் அழுத்தம் அளப்பரியது. அதில் கடல்புரத்தில் நாவல் செம்மீனுக்கு நிகரான இடத்தைப் பெறுகிறது. மணப்பாடு கதைக் களம். காதலைக் கடலின் பின்புலத்தில் சொன்ன பிரதி. பிலோமியின் மனவெளியில் சுருளும் பரதவர் கதாசரித்திரம், கடற்கரைக் காயலில் வாழும் பல்வேறு தரப்பினரின் அடையாளங்களையும் அவர்களின் வாழ்க்கைப் போராட்டங்களையும் பின்பலமாக்கியுள்ளது. குருஸ் மைக்கேல், செபஸ்தி, ரஞ்சி, ஐசக், சாமிதாஸ் எனப் பல மாந்தர்கள் வழியாகக் கடல்வாழ் பரதவர்களின் சித்திரங்கள் மேலெழும்புகின்றன. கடலை மையமாகக் கொண்டு நடக்கும் வன்முறை, காதல், காமம், இனக்குழுக்களின் முரண், மோதல் என நாவல் விரிந்த களங்களுக்குப் பயணிக்கிறது. கடலுக்கு இன்னொரு பெயர் புணரி. கடல் ஆற்று நீரையும் மழைநீரையும் புணர்தலால் புணரி எனப்பட்டது போலும்! என்கிறார் மா.இராசமாணிக்கனார்.[1]

சகப் பரதவனான சாமிதாஸை காதலிக்கும் பிலோமி கட்டுகள் அறுந்த காதல் பயணத்தில் திக்கு முக்காடி நிற்கிறாள். பிலேமியின் தந்தை குருஸ் மைக்கேல் முரடன். மரியம்மை குடும்பத்தைத் தாங்கும் சுமைதாங்கி. பிலோமியின் காதல் ஏற்படுத்தும் பிரளயம்தான் கதைச்சரடு. இனக்குழுக் காதலையும் காமத்தையும் அங்கீகரித்தாலும் பொருளாதாரச் சமன் பாடுகளில் மேலத்தெரு, கீழத்தெரு எனும் இருண்மைகளில் சமப்படுத்திக் கொள்வதில்லை. இன, வர்க்க விலகலும் வெறுப்பும் பல படித்தானவை. பிலோமி இடைவெளிகளைப் பேசிப்பேசித்தான் அகற்றுவாள். அவளுக்கு எல்லாமே பேச்சுதான். பேச்சின் வழியாக அன்பை மட்டுமல்ல பகையையும் தங்கள் இனக்குழுவின் வன்மத்தையும் போக்க சதா முனைபவள். மனம் தடுமாறும்போது கடலின் காற்றும் அதன் ஓசையும் அவளை நல்வழிப்படுத்தும். நிலத்தில் நடக்கும் எல்லா ஒலிகளையும் கடலின் ஓசையால் மறப்பவள். எல்லா சத்தங்களையும் மீறிக்கொண்டு கடலின் ஓசையைப் பின் தொடர்ந்துதான் அவளது மனம் செல்லும். ஊரின் மூலை முடுக்கெல்லாம் எழும் பரதவக் குடிகளின் சண்டை சச்சரவுகளை மறப்பதற்கு வண்ணவண்ணமாய் தோன்றும் கடலின் பரந்த வெளிகளும் நீலவானின் மாயத் தோற்றங்களும் அவளின் மனதை நிறைப்பவை.

பரதவரின் பண்பாட்டு அசைவாக்கங்கள் துல்லியமாகக் கடல்புரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குழந்தை பிறந்தால் முதலில் தாய்ப்பாலை புகட்டுவதில்லை. கடலின் நீரைத்தான் சுவைக்கத் தருவார்கள். அதற்குப் பிறகுதான் தாய்ப்பால். கடலின் நீரை ருசிப்பார்த்தவன்தான் கடலை ஆளுகை செய்ய முடியும் என்பது நம்பிக்கை. தென்னகத்துக் கடல்புரங்களில் பெரும் பாலும் இம்முறை பின்பற்றப்படுகிறது. எவ்வளவு பொருளாதாரப் பின்புலம் இருந்தாலும் அந்த வீட்டில் பிறக்கும் குழந்தைக்கு கடல் நீரைத்தான் சேனையாக வைக்கின்றனர். நிலத்தில் வாழ்பவர்கள் சீனித்தண்ணீரை நாக்கில் தொட்டு வைப்பார்கள். கடலின் அலைகளோடும்

காற்றோடும் அந்தக் குழந்தையைப் போராடத் தூண்டும் என்பது அவர்களின் முக்கிய நம்பிக்கை. இனக்குழுக்களின் நம்பிக்கைகள் நிலத்தோடு தொடர்புடையவை. பரதவர்களுக்கு நிலம் என்பது கடல்தான். மலைவாழ்க் குடிகள் தங்கள் மலையில் விளைந்த தேனை சேனையாக வைப்பதும், பனங்காடுகளில் வாழும் இனக்குழுக்கள் பதநீரைத் நாக்கில் தொட்டு வைப்பதும் நீண்ட காலத் தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சிகள். கடல் மீனவர்கள் குழந்தையை ஈன்ற தாய்க்கு, அதிகமாகத் தாய்ப்பால் சுரப்பதற்காக, பால்ச்சுரா மீனைத் தருவர். அதற்குப் பணம் வாங்க மாட்டார்கள். முதுவான்கள் வேண்டியவருக்கு தேன் கொடுத்தால் பணம் பெற மாட்டார்கள், பனங்காடுகளைத் தாகத்தோடு கடந்து செல்பவர்கள் தண்ணீர் கேட்கும் போது தரப்படும் பதநீருக்கு பனங்காட்டில் பணம் வாங்கப்படுவதில்லை. அந்தந்த நிலத்தில் முதன்மையாக விளையும் பொருள் என்பது எல்லாருக்கும் பொது உணவாகப் பகிரப்படுகிறது. அது விற்பனையோடு தொடர்புடையது அல்ல. இனக்குழுக்களின் உரிமை. எந்தப் பொருளையும் வாங்கி வருகிறேன் என்பவர்கள் சான்றாக அரிசி, வாங்கி வருகிறேன் என்போம். ஆனால், கறி எடுத்து வருகிறேன் என்று தான் சொல்கிறோம். ஏனென்றால் கறி என்பது வேட்டைக்குழுவில் ஒரு பங்கு. விற்பனையற்றது. ஒரு கூரை எடுத்துக் கொள்வது என்பது குழுவில் உள்ள ஒவ்வொருவரின் உரிமை. அரிசியை வாங்கி வருகிறேன் என்பதற்கும் கறியை எடுத்து வருகிறேன் என்பதற்கும் சந்தை மதிப்பீடு சார்ந்த தொடர்புகள் இருந்தாலும் இனக்குழுக்களின் அடிப்படை உரிமைகளில் சந்தை மதிப்பு என்பது இல்லை. பால்சுரா, தேன், பதநீர் மூன்றும் அனைத்து மக்களுக்குமான நிலத்தின் உரிமைகள். இது போன்ற தமிழரின் பொதுப் பண்பாட்டுத் தொடர்ச்சிகளைத் தமிழ் நிலவெளி முழுவதும் பார்க்க முடிகிறது. பூர்வீகக் குடிகளிடம் அதிகமாகப் பார்க்கமுடிகிறது.

பெண்கள் கடல்சார் தொழில்களான உப்புவிற்பது, கருவாடு விற்பது ஒரு பரதவப் பெண்ணின் வாழ்வு பரதவனை மட்டுமல்ல ஒரு கடலையும் சார்ந்து இருக்கிறது. நாவலில் பலர் அன்னை மேரியை கடலுக்கு நிகராக ஸ்தோத்திரித்தாலும் கடலம்மை தான் அவர்களின் குல தெய்வம். எல்லா நிலைகளிலும் கடலம்மை தான் அவர்களுக்கு மீன்களை வாரி வாரி வழங்குபவள்.

### பொன்னீலனின் தேடல்

தென்மாவட்டங்களில் கன்னியாகுமரி நாகர்கோவில் வட்டாரச் சமூகங்களின் வாழ்வியல் போராட்டங்களைப் புனைவுகளாகப் பதிவு செய்து வருபவர் பொன்னீலன். இவரது புதிய மொட்டுக்கள், மறுபக்கம், புதிய தரிசனங்கள், தேடல் போன்ற நாவல்கள் நாஞ்சில் வட்டார மக்களின் அடையாள நெருக்கடிகளைப் பேசுபவை குறிப்பாக கடல்சார்மக்களின் வாழ்க்கை, மண்டைக்காட்டு கலவரம், கிறித்தவம் கன்னியாகுமரிக்கு வந்தது அதனுடைய தாக்கங்கள், தொடர்ச்சியாக இருந்து வரும் பாரம்பரிய பண்பாட்டு நடவடிக்கைகள் இவை சந்திக்கும் புள்ளிகளில் இருந்து தேடல் நாவல் இயங்குகிறது.

மிக்கேல், சில்வரசு, ஜோசப், ரூபன், சில்வியா, தாசன், ரொசாரியா போன்ற முக்கிய மாந்தர்களின் வழியாகத் கதை எடுத்து உரைக்கப்படுகிறது. கட்டுமரம் ஒன்று மீன்பிடித்துவிட்டு கரை ஏறுவதில் தொடங்கும் நாவல் கட்டுமரத்தில் மீன் பிடிக்க மீனவர்கள் செல்ல நாவல் முடிகிறது. கடலிலிருந்து கரையும் கரையிலிருந்து கடலும் ஆனது, மீனவர் வாழ்க்கை என்கிறது. முட்டம் வட்டார மீனவர்களின் எளிய வாழ்வில் விசைப்படகுக்காரர்கள்,

ஆலப்புழை வட்டார தரகு முதலாளிகள் எப்படியெல்லாம் மீனவர்களின் தொழிலை சிதைக்கிறார்கள் என்பதுதான் தேடல் நாவலின் மையம். புதிய பொருளாதார நிலைகள் இனக்குழுக்களின் வாழ்வில் ஏற்றத் தாழ்வுகளை உணர்வு மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மீனவர்களின் அக வாழ்வில் புதிய பணக்காரார்களின் வாழ்வியல் முறைகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ரூபன், சில்வியின் வயிற்றில் கரு வளர்வதை அறிந்தும் அவளைக் கைவிடுகிறான். அவன் பெரிய இடத்தில் பெண் கட்டியதால் மீனவர்களும் அவனைத் தட்டிகேட்க மறுக்கின்றனர். ரொசாரியோ விசைப் படகுகளை வைத்து அரசினை ஏமாற்றி, அளவுக்கு மீறி மீன்களைப் பிடித்து விற்று பணக்காரனானாவன். மருமகனைத் தனது வீட்டோடு வைத்துக் கொள்ளும் புதிய பண்பாட்டுத்தடங்களை இனக்குழுவிற்குள் உருவாக்குகிறான். பக்தவத்சல பாரதி தேடல் நாவல் பற்றிக் குறிப்பிடும்போது தேடல் குமரிமாவட்ட கிராமங்களில் நகரியம் எவ்வாறு இயக்கம் பெறுகிறது என்பதை விளக்குகிறது. விசைப்படகுகள் அறிமுகத்தின் மூலம் புதிய பணக்காரர்கள் உருவாகுவதையும் நகரியம் நவீனமயம் ஆகியவற்றின் தாக்கங்களையும் எடுத்து ரைக்கிறது என்கிறார்.[2] ரூபனும் மேல்தட்டு வர்க்க வாழ்வை ஏற்றுக் கொண்டு இனக்குழுவாழ்வைச் சிதைக்கிறான். பணம் வீசிய ஏஜெண்டுகளில் மிக்கேல்மகன் ரூபனும் ஒருவன். படித்த இளைஞனான அவனுக்குத் தகப்பனின் லுங்கியும் மடிப்புக் கலையாத சட்டையும் அணிந்துகொண்டு, அவன் கடற்கரையில் தரகனாக அலைகிறான். அவனுக்கு ஒரு உதவியாளன் - கமலுரசு. ஒடுங்கிய மூஞ்சியும் மெலிந்த உடலுமாக, குடல் நீக்கப்பட்ட வாளைமீன் போல் இருந்தான் அவன். அவனும் பத்தாவது படித்தவன்தான். ஒருவர் தோளில் ஒருவர் கை போட்டு விசிலடித்துப் பாடியவாறு இருவரும் கூட்டத்தை நெரித்துக்கொண்டு மீன் அருகே வந்தார்கள். அங்கே நின்று கொண்டிருந்த பூதநாதனைக் கண்டதும் ரூபன் முகத்திலிருந்த உற்சாகம் மறைந்து விட்டது. கண்களில் ஒருவித அகவை பரவியது.[3] மீனவர்கள் ஓரளவிற்கு படிக்கும் போது ஏற்படும் புறம் சார் மாற்றங்கள் இவை. கல்வி பணம் சம்பாதிக்க தங்கள் இனத்தைக் காட்டிக் கொடுக்கக் கற்றுத் தருகிறது. ரூபனின் தந்தை மைக்கேல் இவற்றை செயல்படுத்துகிறான்.

தரகு முதலாளியம் நாகர்கோவில் நகர உருவாக்கம், இவையெல்லாம் மீனவர்களின் அகவாழ்வை மட்டுமல்ல புறவாழ்வையும் தீர்மானிக்கின்றது. உணவு, குடி, சீட்டு விளையாட்டு, மாதாகோவில் வழிபாடு என்றிருப்பவர்களின் வாழ்வில் பொருளாதாரப் பின்னடைவும் புயலின் தாக்கமும் பெரும் சேதாரத்தை ஏற்படுத்துகின்றது. புயலின் தாக்கங்கள் அதிகமாக இருந்தபோதும் அவர்களுக்குப் போதுமான உதவிகள் கிடைக்கவில்லை. கட்டுமரங்கள் இழந்து, வீடுகள் நீரில் மூழ்கி வாழ்வாதாரம் சிதைந்து பட்டபோதுகூட, பெயரளவிற்கே உதவிகள் கிடைத்தன என்கின்றனர். ஜனங்களுடைய கூச்சல் மேலும் மேலும் தெளிவாகக் கேட்கத் தொடங்கிற்று. எத்தனை வீடு அழிந்ததோ, எத்தனை பேர் இறந்தாரோ, எத்தனை கட்டுமரம் கடலோடு போயிற்றோ அவலக் குரல்கள் தாசனின் இதயத்தில் மோதின[4] மீன் பிடிக்காத காலங்களில் பரதவர் குடியிருப்புகளில் வறுமை, பசி தாண்டவமாடுகின்றன. சில்வி கைக்குழந்தையை வைத்துக் கொண்டு தடுமாறுகிறாள். கடலில் மீன்பாடு இல்லை. கடல்புறத்தில் பஞ்சமும், பசியும், நோயும் பரவின. இறால் மீன் கிடைத்த காலத்தில் அவசியமாகவும் அனாவசியமாகவும் வாங்கப்பட்ட ரேடியோ முதல் நிலைக் கண்ணாடி வரையிலான பொருட்களெல்லாம் பக்கத்து ஊர்களில் அரிசிக்கும் கிழங்குக்கும்

கை மாறின. உண்ணும் கலங்களைக்கூட அனேகம் பேர் அடமானம் வைத்துத்தின்று விட்டார்கள். வாடி வதங்கிய ஜனங்கள் திண்ணையில்குந்திபெருமூச்செறிந்தார்கள். பசி பொறுக்க இயலாத சிலர் மண்ணைக் குவித்து அதன் மீது வயிற்றைக் கவிழ்த்துக் கொண்டு வெட்ட வெளியில் கிடந்தார்கள். கவனிப்பாரற்ற சிறுவர்கள் பெற்றோருக்குத் தெரியாமல்உள்நாட்டுக்கிராமப்புறங்களில் கல்யாண வீடுகளை மோப்பம் பிடித்தவாறு அலைந்தார்கள்[5].

புயல், பஞ்சம் வந்த போதும் தாசனைக் கணவனாக ஏற்றுக்கொள்ள தயங்குகிறாள் சில்வி. அவன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழட்டும் என்று விரும்புகிறாள். குழந்தையைப் பராமரிப்பதில் இருந்து சில்வியியைப் பார்த்துக்கொள்வது வரை தாசன்தான். அவன் ஒரு இனக் குழுத்தலைவனாகவே காட்சி அளிக்கிறான். ஆலப்புழையிலிருந்து வரும் மலையாளிகள் பணத்தை மொத்தமாகக் கொடுத்து கட்டுமரக்காரர்களை வளைத்து விடுகிறார்கள். உள்ளூர் மீன் வியாபாரிகளுக்கு மீன் கிடைக்காமல் அல்லல் படுகின்றனர். இதனால் உள்ளூர் மீன்வியாபாரிகளின் தொழில் வாழ்வாதாரம் படு மோசமான நிலைக்குச் செல்கிறது. இயல்பான வாழ்க்கை வாழும் உள்ளூர் காரர்களுக்கும் வெளியூர்க்காரர்களுக்கும் மோதல், கொலை, சிறைச்சாலை என நகர்கிறது. மீனவர்களின் மீன்பிடித்தல் தொழிலை நிலத்தில் வாழ்பவர்கள் சிலபரதவர்களைஉடன்வைத்துக்கொண்டு, தரகு முதலாளியத்தின் வழி மீனவர்களைத் தங்களிடம் கையேந்தி நிற்கத் தூண்டுகின்றனர். மீனவர்களின் தொழிலை, அரசியலை, பண்பாட்டைக் கட்டமைப்பவர்களாக நிலத்தில் இருப்பவர்கள் பல நேரங்களில் இருக்கிறார்கள். பரதவர்களின் வாழ்க்கை எப்படியெல்லாம் நிலத்தில் இருப்பவர்களாலும்தரகுமுதலாளிகளாலும் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை தேடல் நாவல் மிக நுட்பமாகப் பதிவு செய்கிறது. மீனவர்களின் அடையாள நெருக்கடிகள் இரண்டு விதங்களில் இருக்கின்றன. ஒன்று மதம் ஏற்படுத்திய மாற்றங்கள் இரண்டு முதலாளியம் உருவாக்கிய நெருக்கடிகள். இந்த இரண்டு விதமான சிக்கல்களை மையப்படுத்திப் பொன்னீலன் நாவலை எழுதிச் சென்றுள்ளார்.

### ஸ்ரீதர கணேசனின் வாங்கல்

அடித்தள மக்களின் வாழ்வைப் பதிவு செய்த தென்னகத்தின் முக்கியப் படைப் பாளியாக இருக்கிறார் ஸ்ரீதர கணேசன். விளிம்புநிலை மக்களின் வாழ்வியலைத் தொடர்ந்து கதைகளாக எழுதி வருகிறார். உப்புவயல், வாங்கல், சந்தி போன்ற நாவல்களின் களமும் சம்பவங்களும் பொது வெளியில் பேசப்படாதவை. மிக முக்கியப் பதிவுகள் இவை. வாங்கல் தூத்துக்குடிக்கு அருகில் உள்ள பெரியதாழை எனும் கடற்கரை கிராம மக்களின் வாழ்வியலைப் பேசுகிறது. கத்தோலிக்க மீனவர்களாக அறியப்படும் பெரியதாழை மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், திருவிழாக்கள் வாழ்வியல் நெருக்கடிகள் என நாவல் விரிந்த களங்களுக்குள் பயணிக்கிறது. கடல் கொந்தளிப்பை பரதவர்கள் வாங்கு? அல்லது வாங்கல் என்பர். இந்நாவல் பெரிய தாழைக் கடலில் உருவாகும் வாங்கை மட்டுமின்றி பரதவர்களின் வாழ்வில் உருவாகும் வாங்கையும் எடுத்துரைக்கிறது, என்கிறார் ஆ.சிவசுப்பரமணியன்.[6]

கைத்தான் பிள்ளையின் மூன்று மகன்களானரோசாரி,தொம்மையா,தாமஸ் ஆகியோரைச் சுற்றி பல்வேறு வாழ்வியல் சம்பவங்கள் கதைகளாக அடுக்கப்படுகின்றன. அடித்தட்டு மீனவர்களின் வாழ்வியலைத் தொடர்ந்து சொல்வதில் கணேசன் முனைப்பாக இருக்கிறார். மீனவர்களுக்குள்ளே

நாவிதர்கள், குறி சொல்பவர்கள், சுத்தம் செய்பவர்கள், கருவாடு விற்பவர்கள், மீனவக்குப்பங்களில் எஞ்சியவற்றை எடுத்து வாழ்க்கை நடத்துபவர்கள் எனக் கடல்சார் அடித்தளமக்களின் வாழ்வு வாங்கலின் பிரதானம். இதற்கு உதாரணங்கள் கொம்மையா, பிச்சையா, மாரிநாடர் எனப் பல பாத்திரங்கள் வருகின்றன. மீனவர்களால் மாரிநாடார் பனையேறி, என ஏளனமாக அழைக்கப் படுகிறார். ஒரே இனக்குழுவிற்குள் இருக்கும் ஏற்றதாழ்வுகள் நாவலில் பேசு பொருளாகியிருக்கின்றன. செபஸ்டியான் மனநோயாளியாகப் பார்க்கப்படுகிறான். கல்பனா செய்த ஒரு மீறல் காரணமாகவே வேசியாக அழைக்கப்படவும் பார்க்கப்படவும் துயரில் வாழ்கிறாள். ஓர் இனக்குழுத் தங்களின் மேட்டிமையைப் பறைசாற்ற பல உதிரிகளை உருவாக்குகிறது. பைத்தியம், வேசி, நாவிதன், குறிசொல்பவன், தரகு வேலைக்காரன் என இனக்குழுத் தங்களின் அடையாளத்தைக் காக்கப் பிறரை இழிவாக நடத்துகிறது. வறுமையில் வாடும் எலிசு ராணியை தனது தேவைக்குப் பயன்படுத் திக் கொள்கிறார், பாதிரியார். தன்னிடம் கடன் வாங்கியதை திரும்பத் தரமுடியாத தலித் ஒருவரை தொம்மை பர்னாந்து குழுவாக இணைந்து அடித்தே கொன்று விடுகிறான். அந்த மரணம் நிர்வாகங்களால் கண்டுகொள்ளப் படுவதில்லை. அந்த வட்டாரத்து ஒடுக்கப்பட்டோர் நிலை அதுதான் என்கிறது நாவல். வறுமை, பெருங்குடி, பாலியல்மீறல், சாதி பார்த்து நடக்கும் மீனவர்கள் எனச் சொல்லப்படாத பக்கங்களைச் சொல்லிச் செல்கிறார் ஸ்ரீதர கணேசன். பெரியதாழைக்கு அருகில் உள்ள முத்தம்மாள்புரம் இடம்பெறுகிறது. அங்கு வாழும் ஆதிதிராவிடர்களின் வாழ்வியல் பெரும் நெருக்கடியானது. கடலின் முழு உரிமையின்றி மீனவர்களை அண்டி வாழவேண்டிய நிர்பந்தம். ஆதிதிராவிடர் சேரியின் மின்னடிச் சாம்பானின் வாழ்வு மீனவர்களைச் சார்ந்து இருக்கிறது. மீனவக்குப்பம் சேரியை இரண்டாம் தரமாகவே நடத்துகிறது. சேரிக்கு மீனவர்கள் தான் முதலாளிகள். பக்கிள் பன்னிரண்டாம் வகுப்பு படிப்பதே மீனவர்களுக்கு ஆச்சரியம்தான். மடமும் சாமியார்களும் மீனவர், தலித் முரணைப் பெருக்கிவிடுகின்றன. மின்னாடிச் சாம்பானின் மனைவி இறப்பும் அவளைப் புதைக்க இடத்தை பரதவர்களும் திருச்சபையும் இடம் அளிக்காததால் சிக்கல் பெரிதாகிறது. ஆதிதிராவிடர்கள் தங்களின் உரிமையைப் பரதவர்களிடமும் கிறித்தவத்திடமும் போராடிப் பெற வேண்டிய தேவைகளை வலியுறுத்த, நாவல் முடிந்து விடுகிறது. அடித்தட்டு மக்கள் கொலை செய்யப்பட்டால், அது கண்டு கொள்ளப்படாது இருத்தல், புதைக்க இடம் மறுத்தல் என பரதவர்களின்கீழாக ஆதிதிராவிடர்களின் அடையாளப் போராட்டம் முக்கியமானதாகிறது. தென் கடல் பரப்பில் வாழும் இம்மீனவக் குடிகளிடையே ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பண்பாட்டு நிலையில் வேறுபாடுகள் இருக்கின்றன. மொழி, வழிபாடு, உணவு முறைகள், சடங்குகள் எனப் பல நிலைகள் வேறுபட்டாலும் உணர்ச்சி சார்ந்து பொதுப்பண்பாடு காணப்படுவதைப் பார்க்கமுடிகிறது. பக்தவத்சல பாரதி சமுதாயம் அல்லது பண்பாட்டின் படிமலர்ச்சி ஒரே வழியிலான வளர்ச்சியில் சென்றுள்ளது. அனைத்துப் பண்பாடுகளும் ஒவ்வொரு நிலையையும் கடந்த பின்னரே மேல்நிலையை (நாகரிகம்)அடைகின்றது. ஆனால், படிமலர்ச்சி நிகழ்வில் சமுதாயத்திற்குச் சமுதாயம் அதன் வளர்ச்சி வேகத்தில் வேறுபாடுகளைப் பெற்றுள்ளன,[7] என்கிறார்.

ஜோ.டி.குருஸின் ஆழிசூழ் உலகு, கொற்கை தங்களது குடும்பத்தில் முதல் தலைமுறையாக எழுத வந்து மாபெரும் கதைகளை எழுதியவர் குருஸ். ஓர்

இனக்குழுவைப் பற்றி மற்றவர்கள் எழுதியவைதான் பெரும்பாலும் கடல் சார் நாவல்கள்என இருந்தநிலையைமாற்றியவர் ஜோ.டி.குருஸ். மீனவர் சமூகத்தில் பிறந்த குருஸ் அகத்தாராக கடலின் கதையை எழுதி வருகிறார். இவரது ஆழிசூழ் உலகு, கொற்கை இரண்டும் தென்னகத்தின் முக்கிய கடல்சார் நாவல்கள்.

தூத்துக்குடி வட்டாரத்தில் உள்ள ஆமந்துறையில் கோத்ராபி்ள்ளை, சூசை, சிலுவை ஆகிய மூவரும் சுறா வேட்டைக்குச் செல்லத் தொடங்கியபோது நாவல் தொடங்குகிறது. ஒருவாரம் உடைந்த படகில் தத்தளித்துக் கொண்டிருக்கும் இவர்களின் நினைவுமீட்பு, வழியாகக் கதை பின்னோக்கிச் செல்கிறது. ஆமந்துறை, உவரி வட்டார மீனவர்களின் வரலாறும் அங்கு வியாபாரம் எப்படிப் பெருகி நாடார் சமூகம் பரவியது, கிறித்தவம் பெருகியது அது இனக்குழு வாழ்க்கையில் எப்படி மாற்றங்களை உருவாக்கியது, அதனால் உருவான சிக்கல்கள் எவை, என்பதை வரலாற்றுச் சம்பவங்களாகச் சொல்லிச் செல்கிறது. சங்க இலக்கியத்தில் காணப்படும் நெய்தல் இலக்கியப் பாடல்களை ஆங்காங்கே தந்து இன்றைய கடல்வாழ் மீனவர்களை பண்டை காலத்திற்கு நகர்த்தி கதை முன்னும் பின்னும் ஊசாலாடுகிறது. பெரும்பாலும் கடற்கரையில் நடக்கும் வாழ்வியல் போராட்டங்களைத் தான் இதுவரை வந்த கடல் சார்ந்த நாவல்கள் காட்டின. ஆனால், முதன்முறையாக இந்த நாவல் கடலுக்குள் நடக்கும் மீனவர்களின் வாழ்வியல் போராட்டங்களையும் பதிவு செய்திருக்கிறது. மூன்று தலைமுறைக் கதை. தொம்மந்திரை, கோத்ரா, தோக்களத்தா, அன்னம்மா என ஒரு தலைமுறை. சூசை, கில்பர்ட், எஸ்கலின், மேரி, ஜஸ்டின், வசந்தா என இரண்டாவது தலைமுறை. சிலுவை, சேகர், அமல்டா, எலிசா, வருவேல் என மூன்றாவது தலைமுறை. இந்த மூன்று தலைமுறைகளையும் எடுத்துரைப்பதன் வழியாக ஊர் வரலாறு, வெவ்வேறு குடும்பங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும், தேவாலாயங்களின் வரலாறு, மீன்பிடிப்பில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள், தனுஸ்கொடி அழிந்த கதை, தூத்துக்குடி நகரமாக மாறின கதை என தூத்துக்குடி வட்டாரத்தில் ஏற்பட்ட சமூக அசைவாக்கங்கள் நுட்பமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. நிலமும் கடலும் ஒன்றன் வாழ்வை மற்றொன்று தீர்மானிப்பதைப் பல மாந்தர்கள் வழியாகப் பார்க்கமுடிக்கிறது. கடலில் பருவ நிலை மாறுதல்கள் அவர்களுடைய அன்றாடப் பாடுகளை நிர்ணயிப்பது போலவே கரையில் அவர்களது மொத்த வாழ்வையும் தீர்மானிக்கின்றன கால மாறுதல்கள். இரண்டையுமே முன் ஊகிக்க முடியாதவர்கள் அவற்றின் போக்கில் இழுபடுவதைத் தவிர்க்க முடியவில்லை[8] என்கிறது நாவல்.

பெண்கள் புதிய நாகரிக வாழ்வை எட்டுவதால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளையும் நாவல் கவனத்தில் கொண்டுள்ளது. சுந்தரி ஆசிரியரின் பொருளாதார பலம் பாலியல் உறவு சார்ந்த சுதந்திரத்தை அவருக்குத் தருகிறது. கல்வி, மதம், பேருந்து, இரயில் பயணங்கள் ஏற்படுத்தும் புதுமைகளை இனக்குழு முகம் கொள்ளும் நிலைப்பாடுகள் புதியவை. கிறித்தவம் தங்கள் வாழ்க்கையில் ஒளிவீசும் என நம்பிச் சென்ற பரதவக்குழு அங்கும் சாதிய, பொருளாதார, அதிகார வேறுபாடுகளைக் கண்டு திகைக்கிறது. இனக்குழுவிற்குள்ளும் மதற்திற்குள்ளும் முழுமை வாழ்வுகிட்டாத பல கதா பாத்திரங்கள் கடும் அவஸ்தைகளுக்கும் குழப்பங்களுக்கும் ஆளாகின்றனர். ஒவ்வொரு சமூகத்திற்கும் தன்னை அழைத்துக் கொள்ளும் ஓர் அகப்பார்வை உள்ளதைக் காணமுடிகிறது. கூடவே அச்சமூகத் தினரைச் சுற்றியுள்ள மற்றவர்களின் அயல்பார்வை வேறொன்றாக இருப்பதையும் காணமுடிகிறது. இந்த அயல் பார்வையால் ஏற்படும் இனச்சுட்டுதல் முறையானது,

நம்முடைய சூழலில் பல வேளைகளில் முக்கியமான பழங்குடியினர் எதிர்கொள்ளும் அடையாளச் சிக்கல்களாக இருக்கின்றன.[9]

### கிறிஸ்டோபர் ஆன்றணியின் துறைவன்

துறைவன் நாவல், குமரியிலிருந்து கேராளாவிற்குச் செல்லும் வழியில் உள்ள கொல்லங்கோடு வாழ் மீனவர்களின் கதைகளை முன்வைக்கிறது. கடல் என்பது சாகசம், மீளமுடியாத போர், மீன் என்பது மாயக் கன்னி, மீனவன் அதைப் பிடிக்க முயல்பவன். இரண்டுக்கும் களமாகக் கடல். கதை மார்தாண்டாவர்மா காலத்தில் தொடங்கி எம்.ஜி.ஆர் காலகட்டம் வரை நடந்த வரலாற்று அரசியலைப் பேசுகிறது. மீனவர்கள் வாழ்வில் கத்தோலிக்கம் நுழைந்தது, போர்ச்சுகீசியர் பாதிப்பு என்பன கதையின் போக்கு. மூர்க்கமான இனக்குழு என்பதால் ஒரு தலைமைக்கு கீழ் வரமுடியாமல் பிரிந்து கிடக்கின்றனர். அதனால், மீனவர்கள் தங்களின் ஆதாரப் பிரச்சினைகளைப் பேசி, உரிமைகளைப் பெற்று அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் இருக்கின்றனர் என்பதே மையம். இனக்குழுவின் முக்கிய அடையாளம் ஒவ்வொரு தனிமனிதரும் பெற்றிருக்கும் சுதந்திரம், அவர்களின் தனித்த அடையாளம். கல்வி என்பது மீனவர்களின் வாழ்வை மாற்றும் என்று நம்புகின்றனர். பரத்தலோமியின் கனவு ஆரோனை படிக்கவைப்பதுதான். எதைப் படிக்க வேண்டும் என்ற புரிதல் இல்லை என்றாலும் அவன் பள்ளி கல்லூரிப் படிப்பை கட்டாயம் படித்து முடித்துவிடவேண்டும் என்பதில் ஒரு தந்தையாக முனைந்து செயல்படுகிறார். மார்த்தாண்டவர்மா, தங்களின் எதிர் பெண்களை, மீனவர்களுக்கு அளித்து சமரசத்தை உருவாக்குவதில் தொடங்கி போர்ச்சுக்கல் ஆதிக்கம், மதமாற்றம், கத்தோலிக்க மதத்தின் பங்களிப்பும் பாதிப்பும், லூர்தம்மாள், சைமனின் சேவைகள், காமராஜர் கால கட்டம், எம்ஜியார் காலகட்டம் என ஒரு விரிவான கோட்டுச்சித்திரம் நாவலுக்கான அடித்தளத்தை அமைக்கிறது[10]. அடித்தளத்தில் ஏற்படும் அடையாளச் சிக்கல்களின் இனக் குழுவிற்கும் மதமாற்றத்திற்கும் நடக்கும் உருமாற்றங்களை அடிப்படைகளாகக் கொண்டுள்ளன. மீனவர்கள் தங்கள் பாடுகளில் இருந்து வெளியேறக் கல்வியைப் பிரதானமாக கையில் எடுக்கின்றனர். தந்தை பர்த்தல்லோமியின் இட்சியமே ஆரோனைப் படிக்க வைப்பதுதான். திருவனந்தபுரம் நகரத்திற்கு அவன் செல்வது என்பது இனக்கூட்டுகளிலிருந்து அவன் வெளியேறி வேறொரு வாழ்வை வாழ்வது. பழமைக்கும் புதுமைக்கும் ஆன இடைவெளியில் ஆரோனின் பயணம் நடக்கிறது.

### நிறைவாக

- மதமும் கல்வியும் மீனவர்களின் வாழ்வில் சாதகமான அம்சங்களை அளித்தாலும் மீனவர்களின் நாகரீக மரபு புத்துலக வாழ்வை கட்டமைத்தாலும் அது தரும் அடையாள நெருக்கடிகளும் ஆதீதமானவையே. ஊர்க் கட்டுப்பாடு எனும் நிர்வாகம் அரசப் பிரதிநிதியற்றவர்களாக, அவர்களை மாற்றுகிறது.
- இனக்குழுவின் நிர்வாகமே அவர்களை முன்னகர்த்தினாலும் பல இழப்புகளை, அது சாத்தியப்படுத்தவும் செய்கிறது. ஒரு பக்கம் இனக்குழுக்களின் வரலாறு இன்னொரு பக்கம் இனக்குழுக்களின் பண்பாட்டு அசைவாக்கங்கள் என கதையாடல் மாறி மாறி பின்னி, பின்னிச் செல்கிறது.
- மீன் பிடித்தல் பெருந்தொழிலாக மாறி முக்குவர்களின் வாழ்வை புரட்டிபோடும் சித்திரம் மையமாக ஆகியிருப்பதை பல நாவல்கள் விரிவாகப் பதிவு செய்துள்ளன.

மீன்பிடித் தொழிலின் பல்வேறு வகைகளைச் சொல்லி அது எப்படி விசைப்படகுகள் வந்த பிறகு மறைந்து போகிறது என்பதைப் பல நாவல்கள் பேசுகின்றன.

- நவீன வளர்ச்சியில் மீன் இனம் அழிவது சூழல் சார்ந்த சிக்கலை உண்டாக்கும். முக்குவர்களின் வரலாறு ஒட்டுமொத்த நாவலை இயக்குகிறது. ஓங்கில்கள் செத்து மடியும் போது கடலின் யுகம்மாறுகிறது, என்பது மீனவர்களின் நம்பிக்கை. துறைவன் நாவலில் மீன்குருதி எனும் அத்தியாயத்தில் ஓங்கில்கள் செத்து மிதக்கின்றன.
- நவீனத் தொழில்நுட்பத்தைக் கடல் தொழிலின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்கின்றனர். மீன்தான் தெய்வம். நல்லமீன் வழிகாட்டி, என வாழ்கின்றனர். நல்ல மீனு நமக்கு நல்லது செய்யாமா கெடுதலா செய்யும். அது நமக்கு தெய்வம். லார்சன் சொன்னார். கண்களமூடி நல்லமீனை நினைத்ததும் கண் திறப்பதற்குள் அது நம்முன் வந்து நிற்கும். இதுவரை நல்லமீன் எவரையும் தொந்தரவு செய்ததில்லை. நல்லமீன் வரும்போது மீன்களை விரட்டிக்கொண்டு வரும். நல்லமீன் வாலால் அடித்தபோது அது விரட்டிக் கொண்டு வந்த மீன்கள் அனைத்தும் வலையில் அகப்பட்டுக்கிடந்தது. வலை இழுத்தபோ, மீதிவலை முழுவதும் மீன்கள் துடித்துக்கிடந்தன.[11] மீனின் இருப்பே பரதவர்களின் பண்பாட்டு அடையாளமாக இருக்கிறது.

## குறிப்புகள்

1. மா. இராசமாணிக்கனார், பத்துப் பாட்டு ஆராய்ச்சி,ப.565, சாகித்ய அகாதெமி, சென்னை,2012.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு உரையாடல், ப.109, அடையாளம், புத்தாநத்தம், 2017.
3. பொன்னீலன், தேடல், ப.04, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1998.
4. மேலது, ப.62.
5. மேலது. ப.49.
6. ஆ.சிவசுப்ரமணியன், இன வரைவியலும் தமிழ் நாவலும், ப.62, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை,2014.
7. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.141, அடையாளம், புத்தாநத்தம், 2011.
8. எச். எர். பீர்முகமது, எட்வர்ட் செய்யத்தும் கீழைத்தேயவியலும், ப.84, பாரதி புத்தகாலயம், சென்னை, 2017.
9. க.மோகனரங்கன், சொல் - பொருள் - மௌனம், ப.149, யுனைடெட் ரைட்டர்ஸ், சென்னை, 2004.
10. பக்தவத்சல பாரதி, வரலாற்று மானிடவியல், ப. 68, அடையாளம், புத்தாநத்தம், 2013.
11. ஜெயமோகன், துறைவன், முன்னுரை, முக்கடல், சென்னை, 2015.

## பயன்பட்ட நூல்கள்


1. ஆ. தனஞ்செயன், விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள்(இனவரைவியல் ஆய்வு), நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2015.
2. முனைவர் தே. ஞானசேகரன், மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை,2009.
3. ஆ. சிவசுப்பிரமணியன், தமிழ்க் கிறித்தவம், காலச்சுவடு, நாகர்கோயில், 2014.
4. டி.தருமராஜ், நான் ஏன் தலித்தும் அல்ல, கிழக்கு பதிப்பகம், சென்னை, 2018.
5. அ.கா.பெருமாள், தென்குமரியின் கதை, யுனைடெட் ரைட்டர்ஸ், சென்னை, 2003.